1991
PUBLIC LIBRARY
JAFFNA

# காயத்திரி மந்திரம்

தெளிவான விளக்கமும்
உபாசனை விதியும் கொண்டது.

வெளியீடு:

கு. வி. அச்சகம்
யாழ்ப்பாணம்.

1988

94:5

# காயத்திரி மந்திரம்

85955

யாழ்ப்பாணம் மாநகர நூலக சேவை

25 03 1992

தெளிவான விளக்கமும்
உபாசனை விதியும் கொண்டது

சகல வகையான புத்தகங்களுக்கும்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
119-1/1, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234.

ஆ. வி. அச்சகம்
யாழ்ப்பாணம்.

1988

# வெளியீட்டுரை

காயத்திரி மந்திரம் என்னும் நூலை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். மலைகளுள் இமயம் போலவும், தருக்களுள் கற்பகம் போலவும், தூய்மையில் தேவகங்கை போலவும் உயர்ந்தது, சிறந்தது, காயத்திரி மந்திரம். அருளாளர் பலர், இதனை விளக்கத்துடன் வெளியிட வேண்டும் என்று விரும்பினர். அன்பர். திரு. க. பொன்னுச்சாமி அவர்கள் எம்மைப் பெரிதும் ஊக்குவித்தனர்.

பண்டிதர். திரு. க. மயில்வாகனம் அவர்கள் நூலைத் தொகுத்துதவினார்கள். பண்டிதர். சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களும். பண்டிதர். சிவத்திரு. ச பஞ்சாட்சர சர்மா அவர்களும் மீள்பார்வை செய்துதவியதுடன், அரிய குறிப்புகள் பலவற்றைச் சேர்த்துக் கொள்ளும்படி ஆலோசனை கூறினார்கள். யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர். கலாநிதி . ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் மனமுவந்து ஆசியுரை நல்கிச் சிறப்பித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் இதயங்கலந்த நன்றி.

அன்பர்கள் யாவரும் இந்நூலைப் படித்துணர்ந்து பயன் பெற எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

— வெளியீட்டாளர்



# ஆசியுரை

**கலாநிதி. ப கோபாலகிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எமது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் சுத்தி பெற ஜபமும் தியானமும் பெரிதும் துணைநிற்பன. மனத்தை ஒருவழிப்படுத்தி, இறைவன்பால் செலுத்த மந்திரங்கள் துணைசெய்கின்றன. காயத்திரி மந்திர ஜபத்தினால் மனம், புத்தி, சித்தம் முதலிய அந்தக்கரணங்கள் சுத்தியடைகின்றன. எனவே காயத்திரி மந்திர ஜபம் 'ஜப யக்ஞம்' எனப் போற்றப்படுகின்றது. இம்மந்திர ஜபத்தினால் நாம் சொல்வன்மை பெற்று விளங்குவோம். எமது வாழ்வு சீரும் சிறப்பும் அடையும்.

காயத்திரி மந்திரம் வேதங்களின் சாரமெனப் போற்றப்படுகின்றது வைதிக சமய மரபில் ஆற்றல் மிக்க ஒளியே போற்றுதலுக்குரியதாக விளங்கியது. பரம்பொருளை ஒளியாகவே உணர்ந்து வழிபட்டு உய்வுபெற்றனர். எம்மிடையேயுள்ள அஞ்ஞான இருள் நீங்கி அறிவாகிய ஞானஒளி பெற்றுவிளங்க இந்தக் காயத்திரி மந்திரம் சிறந்த சாதனமாகும். ''ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி'' என இறைவனைத் துதிக்கின்றார் மணிவாசகர். ''அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு'' என இறைவனைப் போற்றுகின்றார் கச்சியப்பர். ''ஊனினை உருக்கி உள்ளொளி'' பெருக்கக் காயத்திரி மந்திரம் காட்டி நிற்கும் ஒளி வழிபாடு பெரிதும் துணைநிற்பதாகும்.

இத்தகைய சிறப்புப்பெற்ற காயத்திரி மந்திரத்தின் மகிமை, பொருளமைதி, ஜபத்தில் ஈடுபடும்முறை, ஜபத்

தினால் உண்டாகும் நற்பயன் ஆகிய அம்சங்களை உள்ளடக்கி, இரத்தினச் சுருக்கமாக விளங்குகின்றது இந்நூல்.

எமது அகத்தே உள்ள இருள்நீங்கி, ஒளியுடன் மிளிர இம்மந்திரம் பெரிதும் துணைசெய்வதாகும். இம்மந்திர மகிமையையும் சிறப்பையும் அறிந்து, அதன் வழிநின்று பெரும்பயன் அடைய வேண்டும் என்ற நோக்கில் வெளி வரும் 'காயத்திரிமந்திரம்' என்ற இந்நூல் அனைவரும் இறைவழிபாட்டில் ஈடுபடுவதற்குத் துணை நிற்பதாகுக.

''இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக''.

ப. கோபாலகிருஷ்ணன்

யாழ்ப்பாணம்,
22 - 9 - 1987.

UBLIC LIBRARY,
JAFFNA,

ஓம்

# காயத்திரி மந்திரம்

பாரமார்த்திகப் பெருவாழ்வை உறுதிப்படுத்துவதற்கு அமைந்துள்ள மந்திரங்களுள் காயத்திரி மந்திரம் தலைசிறந் தது. அதை ஓதவும் உன்னவும் உணரவும் எல்லாரையும் தூண்டுவது சான்றோர் செயல். அதைப் பயன்படுத்துவதற் கேற்பச் சமுதாயமானது சீரிய சமுதாயமாகத் திருந்தி அமையும்.

— ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

85955

# மந்திரங்கள்

வேதத்தை, கருமகாண்டம் ஞானகாண்டம் என இரண்டாகப் பிரிப்பர். கருமகாண்டம் கிரியைகளைச் சொல்லும் பகுதி; அது மந்திரம் பிராம்மணம் என்னும் இரு பிரிவுகளை உடையது. ஞானகாண்டம் அறிவுப்பகுதி; அதில் உபநிடதங்கள் அடங்கும்.

மந்திரங்கள் மக்களின் நல்வாழ்வுக்கென்று எழுந்தவை. அவற்றை இறைவனும் அவனருள்பெற்ற மெய்யறிவினரும் உதவி அருளினர். மந்திரங்களுக்கு அளப்பரும் அருட்சத்தி உண்டு. [1]மந்திரங்கள் நினைப்பவர்களைக்காக்கும் அமைதி உடையவை. விசேடஒலி அமைப்பும் சிறப்பு அமிசங்களும் கொண்டவை. [2]இறைவனே மந்திரவடிவாக இலங்குகின்றான். மந்திரம் என்பது [3]"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி" எனச் சான்றோர் கூறுவர். மந்திரங்கள் [4]ஏழு கோடிவகைப்பட்டன என்பர்.

மணி, மந்திரம், அவுடதம் ஆகிய மூன்றும் உடற்பிணியை நீக்குதலை அனுபவத்தில் அறிந்திருக்கின்றோம். நடுவணதாகிய மந்திரம் உடற்பிணியை மட்டுமன்றி உயிர்ப் பிணியையும் நீக்கி உதவுகின்றது. மந்திரங்களுள் காயத்திரி மிகவும் உயர்ந்தது; சிறந்தது; முன்னேற்றத்துக்கு வழியாக வுள்ளது.

---

1. மந் - த்ர — மந்த்ர : நினைப்பவர்களைக்காப்பது.
2. "மந்திரமும் மறைப்பொருளும் ஆனான்" — அப்பர்சுவாமிகள் 6 ஆம் திருமுறை.
3. ஆசிரியர் தொல்காப்பியர். தொல் சொல் செய் 176.
4. கோடி — அந்தம், முடிவு. ஏழு கோடிகள் : நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வௌஷட், ஹூம், பட்.

## காயத்திரி மந்திரம்

காயத்திரி என்பது கானசொரூபமாய் உள்ளது என்னும் பொருளுடையது. கானம் — இசை. இம்மந்திரம் மிகவும் சிறந்ததாதலின் அருளாளர் இதனை "[1]உயர் காயத்திரி" என்று உரைப்பர். இம்மந்திரத்தை இறைவன், மும்மூர்த்திகளுக்கும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் உபதேசித்தருளினன் என்பது வரலாறு. இதனைப் பிரம காயத்திரி. சூரிய காயத்திரி முதலிய பெயர்களாலும் வழங்குவர். இது வேதத்தின் சாரமாக அமைந்துள்ளது. இம் மந்திரத்துக்குத் தெய்வம்: சூரியன். இருடி: விசுவாமித்திரர்.

காயத்திரி மந்திரம் புறத்தில் இருக்கும் சூரியனை எடுத்துக்காட்டாக வைத்து அகத்தே உறையும் அந்தராத்மனை அணுகவும், அவன் அருள்பெற்று நல்லவண்ணம் வாழவும் துணை புரிகின்றது. ஜீவாத்மனைப் படிக்கிரமத்தில் உயர்த்தி விடுதலைக்கு வழிகாட்டுகின்றது.

## செபமும் தியானமும்

ஆத்ம சாதகன் தெய்விக நெறியில் முன்னேறும் ஒழுங்கினை அருளாளர் வகுத்துத் தந்துள்ளனர். அவை சிரவணம் (கேட்டல்) கீர்த்தனம் (பாடுதல்) ஸ்மரணம் (நினைத்தல்) பாதசேவனம் (திருவடித் தொண்டு) அர்ச்சனை (மலர்வழிபாடு) வந்தனை (விழுந்து வணங்குதல்) சமானம (தலைவனுகக் காணுதல்) தாஸ்யம் (அடிமையாதல்) ஸக்யம் (தோழனுகக் காணுதல்) ஆத்ம நிவேதனம் (தன்னை ஒப்புவித்தல்) என்பனவாம். நாவுக்கரசப் பெருந்தகையார் "[2]முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்னும் திருப்பதிகத்தே அதனைத் தொகுத்தோதி அருளியுள்ளார்.

1. சிவஞானபாடியம் சூ. அதிக 2
2. அப்பர்சுவாமிகள் தேவாரம் திருமுறை 6



ஸ்மரணம் என்பது நினைத்தலாகும். செபமும் தியானமும் நினைத்தலில் அடங்கும். செபம் என்பது தியானிக்கப்படும் பொருளை எதிர் முகமாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தல் என்று பொருள் கொள்ளப்படும். தியானம் என்பது ஒன்றையே சிந்தித்தல் என்பதாகும். அது புறவிகாரங்களில் உழன்ற மனம், அவற்றில் நின்றும் நீங்கித் தன்னுடைய பிறப்பிடமான அகத்தே உள்ள புருடனிடம் செல்வதாகும்.

இம்மியளவும் பிசகாத ஒழுக்க நெறியாகிய இயமமும், அயலார்க்கு நலம் புரிதலாகிய நியமமும், பத்மாசனமாதி ஆசனமும், பிராணவாயுவைக் கட்டுப்படுத்திச் சுவாசத்தை நெறிப்படுத்துவதன் மூலம் மனத்தை ஒருவழிப்படுத்தி இறையுணர்வில் நிறுத்தலாகிய பிராணுயாமமும், பரமாத்மனிடம் கருத்தைத் திருப்புதலாகிய பிரத்தியாகாரமும், மனத்தைப் பிரமத்தில் நிலைநிறுத்துதலாகிய தாரணையும், மற்றும் தியானமும், பிரமத்துடன் தன்னை அபேதமாகக் கொண்டு நெடுநேரம் சிந்தித்து இருத்தலாகிய சமாதியும் ஆகிய எட்டு யோக உறுப்புகளுள் ஒன்ருகத் தியானம் இடம் பெற்றுள்ளது.

இனி, செபமும், மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகைப்படும். மானசம் மனசினுலே செபித்தல். உபாஞ்சு தன் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி மெள்ளச் செபித்தல். வாசகம் பிறர் செவிக்குக் கேட்கும்படி செபித்தல் என்று நூல்கள் கூறும்.

செபம் வாயுடன் இணைந்தது; தியானம் நெஞ்சுடன் இணைந்தது. இறைவன் † "வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சும்" தந்தருளினன். நாம் நாவினுல் செபித்து நெஞ்சினுல் தியானித்து நலம் பெற வேண்டும் என்பது அவன் அருளாணையாகும்.

† அப்பர் சுவாமிகள் திருமுறை 3

உடற்பயிற்சி, உடலுக்கு உறுதி தரும்; கல்விப் பயிற்சி மனக்கோட்டம் தீர்க்கும்; காயத்திரியை சாதகஞ்செய்தல் கல்வி செல்வம் வீரம் முதலியவற்றைத் தருவதுடன் அமையாது ஆத்ம சொரூபத்தையும் ஓங்குவிக்கும்.

## சாதகர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் :

செபம் தியானம் என்பவற்றில் ஈடுபடும் சாதகர்கள் தூய ஆசாரம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். உயிர்களிடத்தே அன்பும் அருளும் பூண்டு தம்மைப்போலப் பிறரையும் நேசித்தல் வேண்டும். அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்பவற்றை அகற்றல் வேண்டும்.

ஆண் பெண் வேறுபாடு இன்றி இருபாலாரும் காயத்திரி மந்திரத்தைச் சாதகஞ் செய்யலாம். பிரமசரியம், இருகப்பிரத்தம், வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் நால்வகை நெறியினருக்கும் காயத்திரி மந்திர செபம் பொதுவானதாகும். சாதகர்களுக்கு உயர்ந்த தகுதியாக உளப் பண்பாடே கருதப்படுகின்றது.

அருள் நலம் கனிந்த பெரியோர், முன்னை நாளில் ஏற்பட்டிருந்த வருணாச்சிரதருமக் கோட்பாடுகள் இடையில் புகுந்து இன்னல் விளைத்தன என்பர். இருபிறப்பு என்பதெல்லாம் உள்ளத்தின் கண் தோன்றும் பரிபக்குவ மாற்றமே என்று அறுதியிட்டுரைப்பர்.

## அனுட்டான விதி :

செபதியானநிகளில் ஈடுபடுவோர் தமது வதிவிடத்தில் அமைதியான சூழலில் ஓரிடத்தை அதற்கென்று ஒதுக்கிக் கொள்க.

மரப்பலகையினுல் ஓராசனம் அமைத்துக்கொள்க.

காலை நண்பகல் மாலை முதலிய மூன்று வேளைகளிலும் செபதியானநிகளை இயற்றுக.



PUBLIC LIBRARY, JAFFNA

பத்மாசனம் இட்டு அமர்ந்து கொள்க.

சிரசு கழுத்து முதலிய உறுப்புகளை நேராக வைத்துக் கொள்க.

உள்ளத்தைச் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கும் தாமரைப் பூவெனப் பாவனை பண்ணுக.

காயத்திரி மந்திரத்தை ஐந்து முறையோ அதற்கு மேலாகவோ உச்சரிக்குக.

ஐந்து நிமிடத்துக்குக் குறையாமல், அரை மணிநேரம் வரை தியானத்தை மேற்கொள்க.

காயத்திரி செப முடிவில் இட்ட தெய்வ நாம செபமும் இயற்றுக.

மந்திரத்தைப் பொருள் தெரியாது செபித்த விடத்தும் பயன் உண்டாம். பொருளுணர்ந்து செபித்தபோது அதிக பயன் உண்டாம்.

## கீதாசாரியன் தியானம் குறித்துக் கூறுவன :

"தியானத்தில் முயல்பவன் எப்போதும் ஏகாந்தத்தில் இருந்து கொண்டு தன்னந்தனியனாய் உள்ளத்தையும் உடலையும் அடக்கியவனாய் ஆசை அற்றவனாய் உடைமைப் பொருள் இல்லாதவனாய் தன்னை நிலைநிறுத்துதல்வேண்டும்."

"சுத்தமான இடத்தில் அசையாததும் அதிக உயரமில்லாததும் அதிக தாழ்வில்லாததும் தருப்பையின் மேல் தோலும் வஸ்திரமும் விரிக்கப்பட்டதுமாகிய ஆசனத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்."

"ஆசனத்தில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப்படுத்தி மனத்தின் செயல்களையும் இந்திரியங்களின் செயல்களையும் அடக்கிக்கொள்ளுதல் வேண்டும்."

''உடல் தலை, கழுத்து இவற்றை ஒரே ஒழுங்காகவும் அசையாமலும் நிறுத்தி ஸ்திரமாய் இருந்து தன்னுடைய மூக்கு நுனியை உற்று நோக்கி ஒருதிசையையும் பாராமல் இருத்தல் வேண்டும்''.

''அலையாத மனத்தனாய், அச்சம் ஒழிந்தவனாய் விரதம் காப்பவனாய் நிலைபெற்றவனாய் மனத்தை அடக்கி என்னையே சிந்தித்து இருக்கக்கடவன். *

## காயத்திரி மந்திர செபத்தின் பயன் :

காயத்திரி மந்திர செபத்தால் மனம் புத்தி சித்தம் முதலிய அந்தக் கரணங்கள் சுத்தியடைகின்றன. மனம் சுத்தியடைந்தால் இகவாழ்வு இனிதாகும். [1] ''மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்'' என்றார் வள்ளுவர் பெருமான். ஆக்கம் - பெருஞ்செல்வம், செபத்தினை ''ஜப யக்ஞம்'' என்று கூறுவர். யக்ஞம் - வேள்வி, காயத்திரி செபம் ஜீவாத்மனைப் பரமாத்மன் மயமாகப் பண்படுத்துகின்றது. சொல்வன்மை, நற்பண்பு, செல்வம் முதலியன சித்திக்கின்றன. காயத்திரி செபம், சிறந்த பிரார்த்தனையுமாகும். அது தனக்காக அன்றிப்பிறர்க்காகவும் பிரார்த்திப்பதற்கேற்றதாக அமைந்துள்ளது. ''தீமஹி'' என்றபதம் பிரார்த்திப்போமாக, என்ற பொருளில் பன்மையில் அமைவதும் இதனை இனிது புலப்படுத்தும்.

---

* பகவத்கீதை 6 / 10 — 14

† திருக்குறள் 457



## காயத்திரி மந்திரம்

ஓம் பூ[4]ர் பு[4]வஸ் ஸுவ:

ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்

ப[4]ர்கோ[3] தே[3]வஸ்ய தீ[4]மஹி

தி[4]யோ யோந: ப்ரசோ[3]தயாத்

### பொழிப்புரை

பிரமம் எங்கும் நிறைந்து, எல்லாம் ஆகி யாவற்றையும் பாதுகாத்துத் தானே தானாகி விளங்குகின்றது. அது உயிர்க்கு உயிராகி, சத்தியமாய், சுயஞ் சோதியாய், இன்னல் யாவற்றையும் களையவல்லதாய், பரிபூரணானந்தமாகி, ஆதியும் அந்தமும் கடந்த நித்தியானந்த சோதியாய் இலங்குகின்றது; அப்பரம்பொருள் பாவங்களை நாசம் செய்வது; அற்புதமும் ஆனந்தமும் பிரகாசமும் வெற்றியும் உடையது.

எங்கள் புத்தியானது தீ நெறிப்பட்டு மாற்றமடைந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் பந்த பாசங்களில் மயங்கா வண்ணமும் அந்தப் பரம்பொருளின் திகழொளியில் தங்கியிருக்கும் வண்ணமும் யாம் தியானிப்போமாக.

### கருத்துரை

யார் நம் அறிவைத் தூண்டுகின்றாரோ அந்தச்சுடர்க் கடவுளின் போற்றற்குரிய ஒளியைத் தியானிப்போமாக.

### பதவுரை

ஓம் = ஓம், பூ: = பூலோகம், புவ: = புவர்லோகம், ஸுவ: = ஸுவர்லோகம், ய: = யார், ந: = நம்முடைய, திய: = அறிவை, பிரசோதயாத் = தூண்டுகின்றாரோ, தத் = அந்த, தேவஸ்ய = தேவனாகிய, ஸவிது: = கடவு

ளுடைய, வரேண்யம் = போற்றுதற்குரிய, பர்க: = ஒளியை, தீமஹி = தியானிப்போமாக.

**விளக்கவுரை**

ஓம் : பிரணவம். மந்திரங்களை ஓதத் தொடங்கும் போது முதற்கண் ஓங்காரத்தை உச்சரித்தே தொடங்க வேண்டும் என்னும் கோட்பாடு குறித்து பிரணவம் முதற்கண் வைக்கப்பட்டுள்ளது. எல்லா மந்திரங்களுக்கும் 'ஓம்' மூலமந்திரமாக விளங்குகின்றது. ஓசை அனைத்துக்கும் பிரணவம் மூலமாதலின் பீஜமந்திரம் என்றும் கூறப்படும். பிரணவம் பரம்பொருளையே குறிக்கின்றது. பீஜம் வித்து, மூலம்.

பூ: புவ: ஸுவ: :

இம்மூன்று பதங்களும் பூலோகம் புவர்லோகம் சுவர்க்கம் என்னும் மூன்றினையும் உணர்த்துகின்றன. இம் மூன்றும் அண்டத்திலும் பிண்டத்திலும் உண்டு என்பர். அண்டம், அகவுலகு. பிண்டம், புறவுலகு. எமக்கு சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகள் மாறி மாறி வருகின்றன. சாக்கிரம் - (நனவுநிலை; சொப்பனம் - கனவுநிலை. சுழுத்தி - மிக்கநித்திரை நிலை. விழிப்பு நிலையில் புறவுலகுடன் தொடர்பு. கனவுநிலையில் உடலும் உளமும் தொழிற்படுகின்றன. புறஉலகத்தொடர்பு இல்லை. சுழுத்தி நிலையில் அகவுலகும் இல்லை. புறவுலகும் இல்லை. மனம் செயலற்றுப் போகின்றது.

---

இம்மந்திரத்திற்குச் செபரமான பொருள் பின்வருமாறு :

தேவஸ்ய — விளங்குகின்ற, ஸவிது: — சூரியனுள்ளிருக்கும், ய: பர்க: எந்தச் சிவபிரான், ந: — எங்களுடைய, தீய: — புத்தியை, பிரசோதயாத் — தூண்டுகின்றாரோ, தத் — அந்த, வரேண்யம் — உயர்ந்தவரை, தீமஹி — தியானிக்கின்றோம்.



பூ: இது சத்து, உண்மை, உற்பத்தித்தானம் என்னும் பொருளைக்கொண்டது.

புவ: இது சித்து, நிறை அறிவு விக்கினம் களைவோன் என்னும் பொருள்களைக்கொண்டது.

ஸுவ: இது ஆனந்தம் பேரின்பம் அளிப்போர் என்னும், அருத்தங்கள் உள்ளது. ஆகவே இன்மூன்றையும் சுருக்கமாகச் சச்சிதானந்தம் என்று கூறிவிடலாம்.

ஸவிது : தேவஸ்யபர்க :

இம்மூன்று பதங்களும் பரவஸ்துவுக்கு விளக்கமாக அமைந்துள்ளன. ஸவிது இதன் வேற்றுமை உருபு ஏற்காத நிலை ஸவித்ரு என்பதாகும்.

ஸவித்ரு :

ஆண்பால், அதன்பெண்பால் ஸாவித்திரி. ஸவித்ரு என்பதற்கு உயிர்தருகின்ற, உற்சாகமூட்டுகின்ற, வாழ்வைச் செப்பனிடுகின்ற என்னும் பொருள்கள் உண்டு. இச்சொல் உலக நடையில் சூரியனையும் உணர்த்தும். பரம் பொருள், உயிர்க்கு உயிராயும் பிரபஞ்சத்துக்கும் ஜீவ கோடிகளுக்கும் ஆதாரமாகவும் முதற்காரணமாகவும் இருக்கின்றது. கண்காண இச்செயலைச் சூரியனே பிரபஞ்சநிலையில் இயற்றுகின்றான்.

தேவ :

என்பது திவ்வியமானவன், பிரகாசமானவன், மேலானவன் என்றெல்லாம் பொருள்படுகின்றது. பிரகாசத்தோடு கூடியிருத்தல் மூலநிலையும் யதார்த்த நிலையுமாகும்.

பர்க :

உருத்திர மூர்த்தியை குறிக்கும் சொல்லாகும். அது சிவபிரானுரையும் உணர்த்து மென்க. உருத்திரன் என்

பதற்கு அழுகை வாயிலாக அழுக்கைப் போக்குபவன் என்று பொருள் கூறுவர். சிவனாரைக் குறிக்குமிடத்து ஞானப்பிரகாசத்தின் வாயிலாக அஞ்ஞானத்தைப் போக்குபவர் என்று கொள்ளப்படும்.

ஸவித்ரு, தேவ, பர்க ஆகிய மூன்று பதங்களைச் செபிக்கும் போது இவற்றால் உணர்த்தப்படும் இறைவனையே பாவனை செய்தல் வேண்டும்.

ஸவித்ரு, பர்க, தேவ ஆகிய மூன்று பதங்களிலும் அகவுலகும் புறவுலகும் அமைந்திருத்தல் :

ஸவித்ரு : புறவுலகில் சூரியனுடைய மகிமைகளைக் குறிக்கின்றது. அகவுலகில் ஆத்மசொரூபத்தின் மகிமைகளைக் குறிக்கின்றது.

(i) புறத்தும் அகத்தும் தூண்டுதலைச் செய்கின்கின்றனர்.

(ii) தூக்கத்தில் நின்றும் தட்டியெழுப்புகின்றனர்.

(iii) உயிரூட்டுகின்றனர்.

(iv) கட்புலனுக்கு எட்டும் சூரியனாகவும் கட்புலன் காண முடியாத சூரியனாகவும் விளங்குகின்றனர்.

வரேண்யம் நிமஹி பிரசோதயாத் ஆகிய சொற்களின் விளக்கம்:

வரேண்யம் : போற்றுதற்குரியது, வருணிப்பதற்குரியது. இனிது விளக்குதற்குரியது இச்சொல் பரமனை இடையறாது புகழ்ந்து கொண்டிருத்தல் வேண்டும். என்பதை உணர்த்துகின்றது. பர்க என்னும் பெயருக்கு இது அடைமொழி நிமஹி : தியானிப்போமாக என்னும் பொருள் தியானம் என்பதற்கு ஒத்த தமிழ்ச்சொல் ''உள்குதல்'' மணிவாசகப் பெருமான், [1] ''ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும்

1. திருவாசகம் 181



உள்ளானை'' என்று கூறுவார். யோக உறுப்பினுள் தியானமும் ஒன்று. யோக உறுப்புகள் எட்டாகும். அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

இயமம் என்பது, மெய்மை கூறுதல், கள்ளாமை பிறர் பொருளை விரும்பாமை, இந்திரியாதிகளை அடக்கல், கொல்லாமை என்னும் இவற்றையுடையது.

நியமம் என்பது, தவம் தத்துவ நூல் ஓர்தல். பெற்றது கொண்டு மகிழ்தல். தெய்வ வழிபாடு முதலியன உடைமை.

ஆசனம் என்பது, பத்மாசனம் முதலிய இருக்கை நிலைகள் பிராணாயாமம் என்பது பிராணவாயுவை விதிப்படி உள்ளே தடுத்து நிறுத்துதல்.

அது இரேசகம், பூரகம், கும்பகம் என மூவகை நிலைத்து, இரேசகம் சுவாசத்தை வெளியேற்றுதல். பூரகம் சுவாசத்தை உள்ளே இழுத்தல். கும்பகம் சுவாசத்தை நிறுத்துவது.

பிரத்தியாகாரம் பொறிகளைப் புலன் வழிச் செல்லவிடாது தடுத்தல்.

தாரணை மனத்தைப் பிரமத்தில் நிறுத்துதல்.

தியானம் தாரணையின் முதிர்ந்த நிலைமை.

சமாதி : கடவுளுடன் தன்னை அபேதமாக நெடுநேரம் சிந்தித்துக் கொண்டிருத்தல்.

பிரசோதயாத் ;

'தூண்டுகிற' என்பது இதன் பொருள். இச்செயல் சீவாத்மாவினுடையது அல்ல. உள்ளத்தே வீற்றிருக்கும்

பரமாத்மாவினுடைய செயலேயாகும். அச்செயல் ஆதி அந்தமற்றது. ஆன்றோர் அதனைத் திருவருள் என்று கூறுவர். தூண்டுதல் உடன்பாட்டு முறையிலும் எதிர்மறை முறையிலும் நிகழ்ந்துகொண்டுஇருக்கின்றது. கேட்டை நீக்கி நல்லதை நாடவழி செய்கின்றது.

ந: திய: பிரசோதயாத்:

நம்முடைய அறிவைத் தூண்டுகின்ற என்றபடி, புறத்தே உள்ள சூழ்நிலை அறிவைத் தூண்டுகின்றது. தூண்டுதல் இரு நிலைகளில் நடைபெறுகின்றது. மணி ஓசை கேட்டதும் சுவாமியைக் கும்பிடத் தூண்டப்படுவது போல்வது உடன்பாட்டுவழி. பயம் ஏதுவாகப் பாம்பைக் கண்டதும் ஓடித்தப்பிக்கொள்ளத் தூண்டுவது எதிர்மறைவழி.

காயத்திரி மந்திரத்தில் ஒற்றை (மெய்யெழுத்தை) நீக்கி எண்ண 24 எழுத்துக்கள் காணப்படுகின்றன. அருளாளர் ஒவ்வொருவரிக்கும் எட்டெழுத்து உண்டென்பர். வேதத்தின் அடைவும் இதுவாம் என்பர்.

## காயத்திரி மந்திரம் பற்றி மேலும் சில விளக்கங்கள்:

இந்த மந்திரத்தில் தத் என்பது தொடங்கி பிரசோதயாத் என்பது முடிவுள்ள பகுதியே காயத்திரி எனப்படும். இதிலுள்ள மூன்று அடிகளும் மூன்று வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டன என்று மநு கூறுகின்றார். வேதமந்திரங்கள் பிரணவம் என்னும் ஓங்காரமந்திரத்துடன் தொடங்கி ஓங்காரத்துடன் முடிக்கப்பட வேண்டுமென்பது விதி. இதன்படி முதலில் பிரணவம் சேர்க்கப்படுகிறது. அதன் மேல் பூ: புவ: ஸுவ: என்னும் மூன்று மந்திராட்சரங்களும் காயத்திரியின் அங்கமாகச் சேர்க்கப்படுகின்றன. இவை வியாஹ்ருதி என்னும் பெயர் பெறும். காயத்திரியை ஜபம் செய்பவர்கள் பிரணவத்தோடும் வியாஹ்ருதியோடும் சேர்த்தே ஜபிப்பார்கள். பிராணாயாமத்தில் காயத்திரியை உபயோகிக்கும் போது வியாஹ்ருதி விரிவடைகிறது. காயத்திரியின் பின் சிரஸ் என்னும் மந்திரம் சேர்க்கப்படுகின்றது.



இடமூக்கினால் சுவாசத்தை உள்ளிழுத்தலாகிய பூரகத்தின் போது, ஓம் பூ: ஓம் புவ: ஓம்ஸுவ: ஓம்மஹ: ஓம். ஜந: ஓம் தப: ஓம் ஸத்யம்' என்னும் வியாஹ்ருதியை மானசிகமாக ஜபிக்க வேண்டும். இருமூக்கினையும் அடைத்துச் சுவாசத்தை நிறுத்துதலாகிய கும்பகத்தின் போது பிரணவத்தோடு காயத்திரியை ஜபிக்க வேண்டும். வலமூக்கினால் சுவாசத்தை விடுதலாகிய ரேசகத்தின் போது 'ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் [3]ப்ருஹ்ம [4]பூர்ப்புவஸ்ஸுவராப ஓம்' என்னும் சிரோமந்திரம் ஜபிக்கப்படும்.

பல வேதோப நிடதங்களுக்குத் தமிழுரை எழுதிய 'அண்ணா'' சுப்பிரமணிய ஐயரவர்கள், வியாஹ்ருதிசிரசு என்பவற்றுடன் சேர்ந்த காயத்திரிக்குப் பின்வருமாறு மொழி பெயர்ப்பு எழுதியிருக்கிறார்:

அ. ஓங்காரமே பூலோகம். ஓங்காரமே புவர்லோகம். ஓங்காரமே ஸுவர்லோகம். ஓங்காரமே மஹர்லோகம். ஓங்காரமே ஜனலோகம். ஓங்காரமே தபோலோகம். ஓங்காரமே ஸத்திய லோகம்.

ஆ. ஓங்காரப் பொருளான எந்தப் பரமாத்மா நம்முடைய புத்தி சக்திகளைத் தூண்டுகிறாரோ, அந்த அனைத்தையும் படைக்கின்றவரான பகவானுடைய சிறந்த ஜோதிஸ்வரூபத்தைத் தியானிப்போம்.

இ. ஓங்காரமே ஜலமும், ஒளியும், ரஸம் பொருந்திய அன்னத்தையளிக்கும் பூமியும், உயிருக்கு ஆதாரமான வாயுவும், எங்கும் பரந்த ஆகாசமும். பூ: புவ: ஸுவ; என்பவை குறிப்பிடுவனவாகிய மனம் புத்தி அகங்காரம் என்ற தத்துவங்களும் ஓங்காரமே.

85955

"The Gayatri Mantra should be carved on the doors of every laboratory in the world"

*Professor J. B. S. Haldane*
(Famous British Scientist)

"நிச்சயமாக அனைத்துலகிலுமுள்ள ஆய்வுகூடக் கதவுகள் தோறும் காயத்திரி மந்திரம் பொறிக்கப் படுதல் வேண்டும்"

பேராசிரியர். ஜே. பி. எஸ். ஹல்டேன்
(புகழ்மிக்க பிரித்தானிய விஞ்ஞானி)

85955

அச்சுப்பதிவு :
கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

'இருளில் இருந்து என்னை
ஒளிக்கு இட்டுச் செல்வாயாக.'